# தமிழ்நாடு மின்வாரிய தொழிற்சங்கங்களின்
# கூட்டு நடவடிக்கை குழு - சென்னை

நாள்: 15.03.2025

பெறுநர்

**தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் அவர்கள்,**
**தமிழ்நாடு மின்சார வாரியம் லிமிடெட்**
144, அண்ணாசாலை, சென்னை 600 002

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** துணை மின் நிலையங்களை அவுட்சோர்சிங் செய்வதன் மூலம் வேலைபளு ஒப்பந்தமீறல் - உண்மைகளை ஆய்வு செய்யாமல் எடுக்கப்பட்ட முடிவு நிறுத்தி வைக்க கோருதல் - தொடர்பாக

**பார்வை :** 1. **(Per) CH TANTRANSCO Proceedings No. 48, Dt 12.03.2025**

தற்போதைய மதிப்பிற்குரிய தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் பொறுப்பேற்றதிலிருந்து நமது நிறுவனத்தில், பணியாளர்கள் நலன் மற்றும் நிறுவனத்தின் நலன் குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இருப்பினும் உண்மைகளை ஆய்வு செய்யாமல் எடுக்கப்பட்டு வரும் சில முடிவுகள் குறித்து, குறிப்பாக துணை மின் நிலையங்களின் செயல்பாடு மற்றும் பராமரிப்பு பணிகளை அவுட்சோர்சிங் செய்வது தொடர்பான மேற்கோளில் குறிப்பிட்டுள்ள உத்தரவுகள் குறித்து தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு தனது எதிர்ப்பினை பதிவு செய்ய விரும்புகிறது. இது நிறுவனத்திற்கும், தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான வேலைபளு ஒப்பந்தத்திற்கு எதிரானது. நிறுவனத்தின் நலனுக்கும் ஆபத்தானதுமான இந்த முடிவினை தமிழ்நாடு மின்சார வாரிய தொழிற்சங்கங்களின் கூட்டு நடவடிக்கைக்குழு கடுமையாக எதிர்க்கிறது.

நமது நிறுவனம் திறம்படவும், சுமூகமாகவும் செயல்படுவதற்காக 4 வருடங்களுக்கு ஒருமுறை தொழிற்சங்கங்களுடன் வேலைபளு ஒப்பந்தம் செய்து வருகின்றது. தொழிற்சங்கங்கள் தங்களின் உறுப்பினர்களின் நலனுக்காகவும், நிறுவனத்தின் நலனை கருத்தில் கொண்டும், தங்கள் பல சலுகைகளை விட்டு கொடுத்தே இந்த ஒப்பந்தத்தை செய்து கொள்கின்றன. வேலைபளு ஒப்பந்தத்தினை மீறாமல் கடைப்பிடிக்க வேண்டிய தார்மீக பொறுப்பு இரு தரப்பினருக்கும் உண்டு. ஒப்பந்த மீறல் ஏற்பட்டால். தேவைப்பட்டால் ஒப்பந்த முறிவு ( Breaching of Settlement) எழுப்ப தொழிற்சங்கங்களுக்கு உரிமை உண்டு.

துணை மின் நிலையங்களும் வேலைபளு ஒப்பந்தத்தின் கீழ் வருகின்றன. மேலும் துணை மின் நிலையங்கள் தொடர்பான பதவிகளை அனுமதிப்பது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வருகிறது. எனவே, ஒருதலைபட்சமாக முடிவுகளை எடுப்பதற்குப்பதிலாக மாற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால், இது தொடர்பாக தொழிற்சங்கங்களுடன் விவாதிக்க நிறுவனம் கடமைப்பட்டுள்ளது. துணை மின் நிலையங்களை அவுட்சோர்சிங் செய்வதன் மூலம், வாரியம் ஒப்பந்தத்தினை அப்பட்டமாக மீறுவது மட்டுமல்லாமல், வேலைபளு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டு வரும் நோக்கத்தினையே தோற்கடித்துள்ளது.

நமது நிறுவனம், மின்சார நிறுவனங்கள் மட்டுமன்றி, பொதுத்துறை நிறுவனங்களிலும் முன்னணியில் உள்ள நிறுவனங்களில் ஒன்றாகும். 60 ஆண்டுகளுக்கும் மேலாக பொது மக்களுக்கும்,



Scanned with OKEN Scanner

தொழில் துறைகளுக்கும் மின்சாரத்தை வழங்கி வருகிறது. இது பணம், பொருள், மற்றும் மனித சக்தியில் மட்டுமல்ல, பொறியாளர்கள் மற்றும் ஊழியர்களின் அர்ப்பணிப்பு மற்றும் தொழில்நுட்ப நிபுணத்துவத்தின் அடிப்படையிலும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

துணை மின் நிலையங்களை அவுட்சோர்சிங் செய்வது பேரழிவிற்கு வழிவகுப்பதோடு மட்டுமல்லாமல், நமது நிறுவனத்தில் நன்கு நிறுவப்பட்ட மின்சார கட்டமைப்புகளை தடம்புரளவும் செய்யும்.

துணை மின் நிலையங்களின் இந்த அவுட்சோர்சிங் முறை என்பது நிச்சயமாக வேலைபளு ஒப்பந்தமீறல் என்பதோடு இல்லாமல் நிறுவன நலனுக்கு எதிராகவும் உள்ளது.

எனவே துணை மின் நிலையங்களை அவுட்சோர்சிங் செய்வது தொடர்பாக இதுவரை பிறப்பிக்கப்பட்ட அனைத்து உத்தரவுகளையும் ரத்து செய்து அதன் மூலம் வேலைபளு ஒப்பந்தத்தினை மதித்து, நடவடிக்கை எடுத்திட தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநரை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

நன்றி

தங்கள் உண்மையுள்ள

| வ.எண் | சங்கத்தின் பெயர் | கையொப்பம் |
|---|---|---|
| 1 | த. மின்துறை பொறியாளர் தொழிலாளர் சங்கம் . AESU | [signature] |
| 2 | தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு CITU | [signature] |
| 3 | மின்சார பணி அண்ணா தொழிற் சங்கம் | [signature] |
| 4 | [illegible] | [signature] |
| 5 | தமிழ்நாடு BRAW மின்சாரத் தொழிலாளர் சம்மேளனம் (INTUC) | [signature] |
| 6 | T.N.E.B ENGINEERS' SANGAM | [signature] |
| 7. | TNEB. Dr. AMBEDKAR Employees | [signature] |
| 8. | TNEB EMPLOYEES FEDERATION | [signature] |
| 9 | TNEB Engineers' Association | [signature] |
| 10. | TNEB Thozhilalar poriyalar Aykkiya Sangam | [signature] |
| 11 | TNEB Engineers' Union | [signature] |
| 12 | TAMIL NADU ELECTRICITY EMPLOYEES CONGRESS (NLO) | [signature] |
| 13 | Tamilnadu National Elecy. Workers Federation (Bureau) | [signature] |
| 14 | Tamilnadu EB Front A 10 [illegible] | [signature] |